செ. கு. எண்: 111 நாள் : 31/08/2011

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**

**"விநாயகர் சதுர்த்தி" திருநாள் வாழ்த்துச் செய்தி**

ஞான முதல்வனாம் விநாயகப் பெருமானின் திருஅவதாரத் திருநாளான விநாயக சதுர்த்தியை உவகையுடன் கொண்டாடும் அனைவருக்கும் எனது உளம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்னல்களை எல்லாம் பொடிப் பொடியாக்கும் கணபதி; சகல கணங்களுக்கும் தலைமைத் தாங்கும் விக்னேஷ்வரர் ஆகிய விநாயகப் பெருமானை முழு முதலாகத் துதித்து தொடங்கும் எந்த ஒரு செயலும் வெற்றியே அன்றி தோல்வி காணாது என்பது நம் நாட்டு மக்களின் தொன்று தொட்ட நம்பிக்கை ஆகும்.

நம்பிக்கை சின்னமாம் தும்பிக்கை நாயகனின் அருளால், வீடெங்கும் மகிழ்ச்சியும், மன நிம்மதியும் தவழட்டும்; நாடெங்கும் நலமும் வளமும் பெருகட்டும்; உலகமெங்கும் அன்பும் அமைதியும் நிறையட்டும் என்று வாழ்த்தி, விநாயகர் சதுர்த்தித் திருநாளை விமரிசையாகக் கொண்டாடும் எனதருமை தமிழக மக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை விநாயகர் சதுர்த்தி நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை -9